**30.06.2026** **STC No. 22/2025** **PW1. நிர்மலா**

கடந்த 09.06.2025–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.08/2026 dated 03.06.2026ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.06.2026.**

<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>குற்றம் சுமத்தப்பட்டவர் ஆஜர் இல்லை. மேற்படி ஆஜர் இன்மை நீதி நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317 (1) –ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>

1. கூட்டுமங்களம் ஊரைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவரை எனக்குத் தெரியுமா என்றால், தெரியும். சுப்பிரமணியன் என்பவரின் மகன் ஜேம்ஸ் என்பவர் தான் எனது மகளை திருமணம் செய்துள்ளார் என்றால், சரிதான். ஜேம்ஸ் என்பவரின் சகோதரி ஜெசி என்பவரை தான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ரமேஷ் திருமணம் செய்துள்ளார் என்றால், சரிதான்.

2. எனக்கு எவ்வாறு 10 லட்சம் ரூபாய் வந்தது என்றால், நான் சிறுக சிறுக சேமித்து வைத்த பணம் ஆகும். நான் மேற்படி சங்கதியை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி 10 லட்சம் ரூபாயை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் கொடுத்தேனா அல்லது எனது மகள் கொடுத்தாரா என்றால், நான் தான் கொடுத்தேன்.

3. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வட்டிக்கு தான் 10 லட்சம் ரூபாய் பணம் கொடுத்தேன் என்றால், சரிதான். மாதம் 1 பைசா வட்டி ஆகும். வழக்காவணத்தில் 24 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றால், சரியல்ல. நான் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக பணம் கொடுத்தது போல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னிடம் காசோலையை எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தார் என்றால், 28.09.2024–ம் தேதியன்று எனது வீட்டில் வைத்து

கொடுத்தார். குற்றம் சுமத்தப்பட்ட நபர் காசோலையை என்னிடம் தான் கொடுத்தார் என்றால், சரிதான்.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நபர் என்று தெரிந்தும் 10 லட்சம் ரூபாய் எதனடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றால், அவர் எனது உறவினர் என்பதாலும், பணம் தேவை என கூறியதாலும், நான் மாதம் 1 பைசா வட்டிக்கு பணம் கொடுத்தேன்.

6. இவ்வழக்கு காசோலை குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது மாமனார் சுப்பிரமணியன் என்பவருக்கு தான் கொடுத்தார் என்றால், இல்லை. எனக்கு தான் கொடுத்தார்.

7. குற்றம் சுமத்தப்பட்ட நபர் காசோலையை அவரது மாமனார் சுப்பிரமணியன் என்பவரிடம் கொடுத்து வைத்ததை எனது மகள் சகாயமேரி என்பவர் அதனை எடுத்துக் கொண்டு வந்து அதனை வைத்து இவ்வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது மகள் வெளிநாட்டில் வசித்து வருகிறார்.

8. நான் ஏன் எனது மகளை இவ்வழக்கில் 2–ம் புகார்தாரராக சேர்த்துள்ளேன் என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த காசோலையை எங்களது Joint Bank Account–ல் தாக்கல் செய்ததால் நாங்கள் இருவரும் சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

9. எனது மகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால், சரியல்ல. எனது மகளை கேட்டு தான் நான் பணம் கொடுத்தேன். குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு பணம் கொடுக்கும் பொழுது எனது மகள் உடன் இருந்தாரா என்றால், இல்லை.

10. உண்மையில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவர் காசோலையை அவரது மாமனார் சுப்பிரமணியன் என்பவரிடம் கொடுத்து வைத்ததை எனது மகள் சகாயமேரி என்பவர் அதனை எடுத்துக் கொண்டு வந்து அதனை வைத்து இவ்வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.